2015 செப்டம்பர் 1]

அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

188—

பேருந்து வசதி

***52564—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூரிலிருந்து கன்னியாகுமரிக்கு தினசரி பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூரிலிருந்து கன்னியாகுமரிக்கு நேரடிப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஆய்வு செய்ததில், பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், தினசரி பேருந்துகள் இயக்க சாத்தியக்கூறுகள் குறைவு. இருந்தாலும், எதிர்காலத்தில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணையின் கடலே! ஏழைகளின் வாழ்வு உயர, அயராது பாடுபடும் எங்கள் கருணை தெய்வமே! கழகத்தின் இதயத் துடிப்பே! (மேசையைத் தட்டும் ஒலி) மனித இனத்தின் மாண்பே!*

தமிழக மக்களின் ஒளி விளக்கே! இளைஞர்களின் கலங்கரை விளக்கமே! மக்களைக் காத்து அருள் கொடுக்கும் மனித தெய்வமே! இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து வணங்குகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் தொகுதியிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அதிகமான ஆசிரியர்களும், மாணவர்களும் பணி சார்பாகவும், கல்வி சார்பாகவும் சென்று வருகின்றார்கள். தற்போது முதுகுளத்தூரிலிருந்து தூத்துக்குடி வழியாக திருநெல்வேலி வரை பேருந்து தினசரி இயக்கப்படுகின்றது. இதனை கன்னியாகுமரி வரை நீட்டிப்பு செய்தால், அப்பகுதியிலுள்ள ஆசிரியர்களும், மாணவர்களும் மற்றும் சுற்றுலாப் பயணிகளும் பயனடையக்கூடிய ஒரு நிலை அமையும். எனவே, கன்னியாகுமரி வரை பேருந்து வசதி செய்துதர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரிக்கு இராமேஸ்வரத்திலிருந்து தினந்தோறும் 5 பேருந்துகள் செல்கின்றன. அதில் இராமேஸ்வரத்திலிருந்து 15 பயணிகளும், இராமநாதபுரத்திலிருந்து 5 பயணிகளும் மட்டுமே செல்கின்றார்கள். முதுகுளத்தூரிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சாயல்குடிக்கு சென்றால், அங்கே 5 பஸ்கள் இருக்கின்றன. மேலும், பயணிகளுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்றும் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திருநெல்வேலி செல்கின்ற பேருந்தை கன்னியாகுமரி வரை விரிவுபடுத்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரி வரை செல்வதற்கு 80 கிலோ மீட்டர் தூரம் இருக்கின்ற காரணத்தினால், ஏற்கெனவே இருக்கின்ற பேருந்தை விரிவாக்கம் செய்வது கடினம். இருந்தாலும் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, பயணிகளுடைய

2015 செப்டம்பர் 1]

எண்ணிக்கைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

திரு. மு. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருநெல்வேலி வரை வரக்கூடிய அந்தப் பேருந்தை ஆய்வு செய்து, கன்னியாகுமரி வரை நீட்டிக்கப்படுமென்ற செய்தியை அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தத் தொகுதி மக்களின் சார்பாக நன்றி சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்கு பேருந்து வசதியை நீட்டிப்பு செய்திடக் கோரி உத்தனப்பள்ளி–லாலிக்கல், நாகமங்கலம், வெள்ளிச்சந்தை, யு. புரம் வரை, கெலமங்கலம்–கடூர், அனுசோனையிலிருந்து கடூர் வரையிலே அதுவும் unserved route; சூளகிரி, ராமன்தொட்டி, சொக்காபுரம், நெரிகம், சென்னசந்திரம், சாப்ரபள்ளி வரையிலே அதுவும் unserved route; சூளகிரி–சின்னார், பேட்டகானப்பள்ளி, பஸ்தலப்பள்ளி, பொன்னல்நத்தம் வரையிலே அதுவும் unserved route ஆகிய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், ஒரு கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேள்வி கேட்க அனுமதி கேட்டீர்கள். நானும் அனுமதி கொடுத்தேன். நீங்கள் ஒரு கேள்வி கேட்டால் பரவாயில்லை. அடுக்கிக்கொண்டே போனால் எப்படி? மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் இருக்க வேண்டுமல்லவா? ஒரு கேள்வி மட்டும் கேளுங்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளையே இதுவரையில் பார்க்காத அந்த வழித்தடங்களிலே, பேருந்து வசதி கேட்டு 4 வருடங்களாக நான்

மனு கொடுத்திருக்கிறேன்; கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆகவே, எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கிற ஆட்சி என்று சொல்லக்கூடிய உங்கள் ஆட்சியிலே இது எங்களுக்குக் கிடைக்கவில்லை; கிடைக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டு, அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், அவருடைய ஐந்தாண்டுக் காலத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்து அவருடைய தொகுதிக்கே பஸ் வாங்க முடியாதவர், மாண்புமிகு அம்மா அவர்களால் மட்டும்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வசதியை ஏற்படுத்தித் தரமுடியும் என்ற நம்பிக்கையோடு சொன்னதற்கு முதலில் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை ஆய்வு செய்து, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 189, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

189—

சொந்தக் கட்டடம்

***61746—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, மாங்கோட்டை ஊராட்சியிலுள்ள கால்நடை கிளை நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?